بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ   نَحْمَدُهٗ وَنُصَلِّي عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ   وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

**பெரும்பாலான மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால் அவர்கள் எவரையும் ஒருபோதும் கொலை செய்ததில்லை. எதையும் அவர்கள் அபகரித்தது கிடையாது. திருடியது கிடையாது. கொள்ளையடித்தது கிடையாது. இது போன்ற வேறு எந்தவொரு மிகப்பெரிய பாவத்தையும் அவர்கள் செய்தது கிடையாது. ஆனால் கேள்வி என்னவென்றால், அப்படிப்பட்ட மக்களில் மற்றவர்களைப் பற்றி புறம்பேசாத, மற்றவருக்குப் பின்னால் புறம்பேசாத, தப்பெண்ணம் கொள்ளாத, அல்லது தனது சகோதரனை இழிவுபடுத்தி அவனுக்கு துக்கம் தந்திராத, எவருக்கும் மனரீதியாக துக்கத்தை கொடுத்திராத, பொய் பேசி தவறிழைத்திராத அத்தகைய மக்கள் அவர்களில் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? என்னால் உறுதியாக கூற முடியும். இந்த விஷயங்களிலிருந்து தவிர்ந்திருக்கக் கூடிய அத்தகைய மக்கள் மிகக் குறைவாகவே இருப்பர்**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் அமெரிக்காவிலுள்ள ஹோஸ்டனில், பைத்துஸ் சமீஃ பள்ளிவாயிலில் 26 அக்டோபர் 2018 அன்று ஆற்றிய ஜும்முஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் நம்மீது செய்துள்ள மிகப்பெரும் அருள் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்முடைய மஹ்தி என்ற வார்த்தைகளால் நினைவு கூர்ந்த அந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை தனது அருளால் ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை நமக்கு வழங்கியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்முடைய என்று கூறி இந்த அன்பு மற்றும் உயர் நெருக்கத்தின் அந்தஸ்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளார்கள்.

அன்னார் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம் மிகுந்த வேதனையுடன், பைஅத்தின் உரிமையை செலுத்துமாறும், உண்மையான இறை அடியார் ஆவதன் பக்கமும் வழிகாட்டினார்கள். அதனை எப்போதும் நாம் நம்முன் வைக்க வேண்டும். அதுவே நமது ஆன்மீக தர்பிய்யத்திற்கு வழியாக இருக்கின்றது. இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் மார்க்க ஞானத்தைப் பெற முடியும். மேலும் இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் இறைதிருப்தியை பெறக்கூடிய வழியையும் தேட முடியும். இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் திருக்குர்ஆனின் ஞானத்தைப் பெற முடியும். இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர் அந்தஸ்தைப் பற்றி தெரிந்து கொள்ள முடியும். இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் நமது கொள்கை அளவிலான நிலைமைகளை சீர்படுத்த முடியும். இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் நமது செயல் நிலைமைகளில் முன்னேற்றதை ஏற்படுத்த முடியும்.

இந்த கருவூலங்களை பெற்ற பின்பும் நாம் இதிலிருந்து பலனடையவில்லையென்றால் நிச்சயமாக நாம் துர்பாக்கியசாலி ஆவோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வார்த்தைகளில் இருக்கின்ற ஆற்றல், பரிசுத்தத்தன்மை மற்றும் தாக்கமானது, வேறொருவரது கூற்றில் இருக்க முடியாது. அவ்வாறு எப்படி இருக்கவும் முடியும். ஏனென்றால் இந்த இமாமைதான் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமையாக இஸ்லாத்தன் மறுமலர்ச்சிக்காகவும், அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காகவும் இந்த காலத்தில் அனுப்பினான்.

ஆக, நமது கடமை என்னவென்றால், அன்னாரது கூற்றுகளை படிக்க வேண்டும். மேலும் அதை செவியேற்க வேண்டும். மேலும் அதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். அன்னாரது கூற்றுகளின் ஒளியில் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே சுயமே ஆய்வு செய்து பார்க்க முடியும். அதாவது நாம் எங்கு நிற்க வேண்டும்? ஆனால் நாம் எங்கு நிற்க வேண்டும்? இறையச்சம் என்றால் என்ன? இறையச்சத்தின் தரம் என்னவாக இருக்க வேண்டும்? நன்மை என்றால் என்ன? நன்மையின் தரம் என்னவாக இருக்க வேண்டும்? நமது பொறுப்புகள் என்ன?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் திருப்தியடைகின்ற அந்த உண்மையான இறையச்சத்தை அடைவதற்காக இறைவன், يَآيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ – அதாவது நம்பிக்கை கொண்டவர்களே! இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள் என்று மீண்டும் மீண்டும் கூறியுள்ளான்.

மேலும் இறைவன், إِنَّ اللّٰهَ مَعَ الَّذِيْنَ اتَّقَوْا وَّالَّذِيْنَ هُمْ مُّحْسِنُوْنَ – அதாவது இறையச்சத்தை மேற்கொள்பவர்களுடன் இறைவனது உதவி இருக்கும் என்று கூறுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: தக்வா என்றால் தீமையிலிருந்து விலகி இருப்பதற்கு கூறப்படும். மேலும் முஹ்ஸினூன் என்பவர் தீமையிலிருந்து மட்டும் விலகி இருப்பவர் அல்ல. மாறாக, நன்மையையும் செய்பவர் ஆவார்.

மேலும் அன்னார் இதனையும் கூறினார்கள்: لِلَّذِيْنَ اَحْسَنُوا الْحُسْنٰى – அதாவது அவர்கள் நன்மைகளை மிகச்சிறந்த முறையில் செய்கின்றனர் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: إِنَّ اللّٰهَ مَعَ الَّذِيْنَ اتَّقَوْا وَّالَّذِيْنَ هُمْ مُّحْسِنُوْنَ என்ற இந்த இந்த வஹீ எனக்கு மீண்டும் மீண்டும் வந்தது. எந்த அளவுக்கு மீண்டும் மீண்டும் வந்தது என்றால், அதை என்னால் எண்ண முடியாது. இறைவனே அறிவான். இரண்டாயிரம் முறை வந்திருக்கலாம்.

இதன் நோக்கம் என்னவென்றால், ஜமாஅத் மக்களுக்கு இது பற்றி தெரிந்திருக்க வேண்டும். அதாவது அவர்கள் நாங்கள் ஜமாஅத்தில் இணைந்து விட்டோம் என்பதை மட்டும் போதுமானதாகக் கருதிவிடக் கூடாது. உண்மையான இறையச்சத்துடன் நன்மையும் இருக்கும் போதுதான் அல்லாஹ்வின் உதவியும் கிடைக்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சில தீமைகள் பெரியதாகும். உதாரணமாக, பொய் பேசுவது, விபச்சாரம் செய்வது, ஏமாற்றுவது, பொய் சாட்சியம் கூறுவது, மக்களது உரிமைகளைப் பறிப்பது மற்றும் இணை வைப்பது போன்றவை ஆகும். ஆனால் சில தீமைகள் எந்த அளவுக்கு நுட்பமானதாக இருக்கின்றதென்றால் அதனை அவன் புரிந்து கொள்வதே இல்லை. இளைஞனாக இருந்து முதியராக ஆன பிறகும் நான் பாவம் செய்கிறேன் என்பது அவருக்கு தெரிவதே இல்லை. உதாரணமாக, புறம் பேசக்கூடிய பழக்கமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: மக்கள் இதனை மிகச்சிறிய பாவமாக கருதுகின்றனர். ஆனால் திருக்குர்ஆன் இதனை பெரிய பாவமாக எடுத்துரைக்கின்றது.

அல்லாஹ் கூறுகின்றான். اَيُحِبُّ اَحَدُكُمْ اَنْ يَّاْكُلَ لَحْمَ اَخِيْهِ مَيْتًا

மனிதன் கூறக்கூடிய ஏதாவதொரு விஷயமானது அவனது சகோதரனை ஏளனப்படுத்தக் கூடியதாக இருக்குமென்றால் அத்தகைய விஷயங்களினால் இறைவன் கோபமடைகின்றான். அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் மரணித்துப்போன உங்களது சகோதரரின் மாமிசத்தை உண்ண விரும்புவீர்களா?

அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு சகோதரனைப் பற்றி அவனது அறியாமை மற்றும் முட்டாள்தனம் நிரூபணமாகும் வகையில் எடுத்துக் கூறுவது தீய பணியாகும். ஆக, அல்லாஹ்வின் இந்த கூற்றின் அடிப்படையில் முதல் படித்தரம் என்னவென்றால், மனிதன் இவற்றிலிருந்து விலகி இருக்க வேண்டும். மேலும் எல்லா விதமான பாவங்களிலிருந்தும் அது கண்களிலிருந்தோ, காதுகளினாலோ அல்லது கைகள் அல்லது கால்களினாலோ வெளிப்பட்டாலும் சரி அதிலிருந்து தப்பிக்க வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: பெரும்பாலான தீமைகன் தப்பெண்ணத்தினாலேயே உருவாகின்றது. எவரைப் பற்றியாவது ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்ட உடனேயே அதை ஆராய்ந்து பார்க்காமல் அப்படியே நம்பி விடுவது தீய விஷயமாகும். எந்த விஷயத்தைப் பற்றி சரியான ஞானம் இல்லையோ அந்த விஷயத்திற்கு உள்ளத்தில் இடமளிக்காதீர்கள்.

அன்னார் கூறினார்கள்: தப்பெண்ணம் நீங்கி விட்டாலே நமது சமூகத்திலுள்ள பாதிக்கும் அதிகமான சண்டைகள், குழப்பங்கள் மற்றும் பகைமைகள் நீங்கி விடும். ஒன்றுமை ஏற்பட்டு விடும். ஒறுமைப்பாடு ஏற்பட்டு விடும். எனவே நீங்கள் தப்பெண்ணத்தை உருவாக்கிக் கொள்ளாதீர்கள். மற்றவர்கள் தொடர்பாக நல்லெண்ணம் கொள்ளுங்கள். அல்லது ஏதாவதொரு விஷயத்தை கேட்டால் அதைப் பற்றி தீர ஆராயுங்கள். மனிதன் பலவீனமானவனாவான். சில விஷயங்கள் உள்ளத்தில் வந்து விடுகின்றது. ஆனால், அதன்படி செயல்படவில்லை என்றால் அல்லாஹ் மன்னித்து விடுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: உள்ளத்தில் ஏற்படக்கூடிய தவறான எண்ணங்களுக்கு மட்டும் எவ்வித பிடியும் கிடையாது. உதாரணமாக, எவரது உள்ளத்திலாவது இந்த செல்வம் எனக்கு கிடைத்து விட்டால் நன்றாக இருக்கும் என்று தோன்றினால் நிச்சயமாக இது ஒருவகையான பேராசையாக இருந்தாலும் பொதுவாக உள்ளத்தில் இது வந்துவிட்டு பிறகு சென்று விட்டால் இதற்கு எவ்வித பிடியும் கிடையாது. ஆனால் இத்தகைய

எண்ணத்திற்கு உள்ளத்தில் இடமளித்து, ஏதாவது சூழ்ச்சி செய்து, தவறான முறையில் அந்த செல்வத்தை அடைய வேண்டும் என்று முயற்சி செய்தால் அத்தகைய மக்களை அல்லாஹ் பிடிக்கின்றான்.

அன்னார் கூறினார்கள்: பெரும்பாலான மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால் அவர்கள் ஒருபோதும் எவரையும் கொலையும் செய்ததில்லை. எதையும் அவர்கள் அபகரித்தது கிடையாது. திருடியது கிடையாது. கொள்ளையடித்தது கிடையாது. இது போன்ற வேறு எந்தவொரு மிகப்பெரிய பாவத்தையும் அவர்கள் செய்தது கிடையாது. ஆனால் கேள்வி என்னவென்றால், அப்படிப்பட்ட மக்களில், மற்றவர்களைப் பற்றி புறம்பேசாத, மற்றவருக்குப் பின்னால் புறம்பேசாத, தப்பெண்ணம் கொள்ளாத, அல்லது தனது சகோதரனை இழிவுபடுத்தி அவனுக்கு துக்கம் விளைவிக்காத, எவருக்கும் மனரீதியாக துக்கத்தை கொடுத்திராத, பொய் பேசி தவறிழைத்திராத அத்தகைய மக்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்?

அன்னார் கூறுகின்றார்கள்: என்னால் உறுதியாக கூற முடியும். இந்த விஷயங்களிலிருந்து தவிர்ந்திருக்கக் கூடிய, எவரைப் பற்றியும் புறம்பேசாமல் இருக்கக்கூடிய, எவருக்கும் துக்கத்தை கொடுத்திராத, தப்பெண்ணம் கொள்ளாத, பொய் பேசாத, உள்ளத்தில் தீய எண்ணத்தை கொண்டிராத மேலும் இறைவனை அஞ்சக்கூடிய இத்தகைய மக்கள் மிகக் குறைவாகவே இருப்பர்.

இப்போது நாம் சுயமே நமது சபைகளை ஆய்வு செய்து பார்ப்போமேயானால் நமது சபைகளில் மற்றவர்களைப் பற்றிய தவறாக பேசப்படுவதையும், சின்னஞ்சிறு விஷயங்களைக் கூட பெரிதாக்கி அதை எள்ளி நகையாடுவதையும் நாம் பார்க்கின்றோம். ஆக இந்த தீமைகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதே நன்மையின் படித்தரமாகும். இதுவே ஒரு நம்பிக்கையாளரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் கூறுகின்றான். முதல் படித்தரம் என்னவென்றால், மனிதன் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும். சுருக்கமாக, நான் இதனையே கூற விரும்புகின்றேன். அதாவது பூமியில் குழப்பம் விளைவிப்பதை இறைவன் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டான். அல்லாஹ் உலகத்தில் ஒற்றுமையை பரப்ப விரும்புகின்றான். ஆனால் எவர் ஒருவர் தனது சகோதரனுக்கு துக்கத்தை இழைக்கின்றார், அநீதி இழைக்கின்றார், ஏமாற்றுகின்றார் என்றால் அப்படிப்பட்டவர் ஒறுமைப்பாட்டிற்கு எதிரி ஆவார். எப்போது வரை இந்த தீய எண்ணங்கள் உள்ளத்திலிருந்து விலகவில்லையோ அப்போது வரை உண்மையான ஒறுமைப்பாடு பரவும் என்பது சாத்தியமில்லாததாகும். திருக்குர்ஆனைப் படியுங்கள். திருக்குர்ஆனைப் படியுங்கள். மேலும் தீய பணிகளை நீங்கள் விரிவாக எழுதிக் கொண்டே செல்ல வேண்டும். மேலும் இறைவனது அருள் மற்றும் உதவியின் மூலமாக இந்த தீமையிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். இது இறையச்சத்தின் முதல் படித்தரமாகும்.

தீமையிலிருந்து தப்பிப்பதற்கு நீங்கள் இப்படிப்பட்ட முயற்சியை செய்வீர்கள் என்றால் அல்லாஹ்வும் உங்களுக்கு தப்பிப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவான். மேலும் அவன் உங்களுக்கு கற்பூர பானத்தை வழங்குவான். அதன் மூலமாக உங்களிடம் இருக்கின்ற பாவத்தின் உணர்வுகள் முற்றிலுமாக குளிர்ந்து விடும். எப்போது வரை மனிதன் இறையச்சமுடையவராக ஆகுவதில்லையோ அப்போது வரை அந்த பானம் அவருக்கு வழங்கப்பட மாட்டாது. மேலும் அவரது இறை வணக்கமும் துஆக்களும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஏனென்றால் அல்லாஹ் கூறுகின்றான். إِنَّمَا يَتَقَبَّلُ اللّٰهُ مِنَ الْمُتَّقِيْنَ அதாவது நிச்சமயாக அல்லாஹ் இறையச்சமுடையவரது இறைவணக்கத்தையே ஏற்றுக் கொள்கின்றான். இது முற்றிலும் உண்மையான விஷயமாகும். அதாவது இறையச்சமுடையவரது தொழுகையும், நோன்புமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுவது என்பது தொழுகையின் தாக்கமும் அதன் அருட்களும் தொழுபவரிடத்தில் உருவாகி விட்டது என்பதே ஆகும். மேலும் எப்போது வரை அந்த அருட்களும், தாக்கமும் உருவாகவில்லையோ அப்போது வரை அது வெறும் குனிந்து எழுவதாக மட்டுமே இருக்கும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: குறிப்பாக பொறுப்பாளர்கள் இந்த விஷயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். தமது ஜமாஅத் சபைகளில் பேசப்பட்ட விஷயங்களை தமது வீடுகளிலும், தேவையில்லாத நபர்களிடமும் கூற வேண்டிய அவசியம் கிடையாது. இந்த விஷயத்தை பேணி நடக்க வேண்டும். பெரும்பாலான இளைஞர்கள், ஜமாஅத்தின் பொறுப்பாளர்களிடம் இத்தகைய விஷயங்களைக் கண்டு ஜமாஅத்திலிருந்து அவர்கள் முதலில் கொஞ்சம் கொஞ்சமாக விலகிச் சென்றனர். பிறகு பள்ளிவாசலுக்கு வருவதிலிருந்து விலகிச் சென்றனர். பிறகு இறை வணக்கத்திலிருந்து விலகிச் சென்றனர். பிறகு அல்லாஹ்வை விட்டும் அவர்கள் விலகிச்

சென்று விடுகின்றனர். எனவே வருங்கால தலைமுறையை பாதுகாக்க வேண்டுமென்றால் பொறுப்பாளர்களும், பெரியவர்களும் தங்களிடத்தில் இறையச்சத்தை உருவாக்க வேண்டியது அவசியமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: பெரிய பெரிய தீமைகளை விட்டு விலகி இருப்பது மட்டும் இறையச்சம் கிடையாது. மாறாக நுட்பமான தீமைகளிலிருந்தும் விலகி இருப்பதே இறையச்சமாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். திருக்குர்ஆனை மீண்டும் மீண்டும் படித்து அதனை சிந்தித்துப் பாருங்கள். ஏனென்றால் அல்லாஹ்வின் கட்டளையாகும். எனவே இது அதிகமாக நினைவில் வைக்க வேண்டிய ஒன்றாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு நம்பிக்கையாளர் அவர் ஒரு தீமையும் செய்யவில்லை என்பதனால் மட்டும் மகிழ்ச்சியடைந்து விடுவதில்லை. ஆனால் அல்லாஹ் கூறுகின்றான். தீமையிலிருந்து விலகி இருப்பதனால் மட்டும் அவன் திருப்தியடைவதில்லை. இதற்கு மாற்றமாக நன்மை செய்ய வேண்டும். நான் தீமை செய்வதில்லை என்று பெருமை கொள்பவர் அறிவீனர் ஆவார். இஸ்லாம் மனிதனை இந்த படித்தரம் வரை மட்டும் கொண்டு செல்லவில்லை. மாறாக, அது இரண்டு உரிமைகளையும் முழுமை செய்ய விரும்புகின்றது. அதாவது தீமைகளை விட்டு விட வேண்டும். மேலும் நன்மைகளை கலப்பற்ற முறையில் செய்ய வேண்டும். எப்போது வரை இந்த இரண்டு விஷயங்களும் இருப்பதில்லையோ அப்போது வரை இரட்சிப்பு கிடைக்காது.

அன்னார் கூறுகின்றார்கள்: செயல் நடைமுறையின் மூலமாக உண்மையை வெளிப்படுத்திக் காட்டுங்கள். அதன் மூலம் அவன் உங்களுடன் இருக்க வேண்டும். கருணை, நல்லொழுக்கம், பேருபகாரம், சிறந்த நற்செயல்கள், அனுதாபம், பணிவு ஆகிவற்றில் ஏதும் குறைபாடு இருக்குமென்றால், பிறகு அத்தகயை ஜமாஅத் தான் முதலில் அழிவிற்கு உள்ளாகும் என்பதை நான் அறிவேன்.

சஹாபாக்களின் உதாரணத்தை எடுத்துக் கூறி போதனை செய்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: சஹாபாக்கள் வெளிப்படுத்திக் காட்டிய அந்த முன்மாதிரி என்ன? அவர்கள் இறைவனது வழியில் தமது உயிரை தியாகம் செய்வதற்கு அவர்கள் ஆயத்தமானார்கள். ஆக இறைவனது வழியில் இன்னுரியை மாய்ப்பதற்கு ஆயத்தமாகுவது என்ற நிலையை மனிதன் தன்னிடத்தில் ஏற்படுத்திக் கொள்வது என்பது சாதாரண விஷயமல்ல. ஆக உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவது என்பது முக்கியமான விஷயமாகும். எனவே இது நமக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கின்றது.

அன்னார் கூறினார்கள்: எவருடைய நோக்கம் உலகமாக இருக்குமோ இறைவனது பார்வையில் அவர் இந்த ஜமாஅத்தைச் சார்ந்தவர் கிடையாது. அல்லாஹ்வின் பார்வையில் எவர் உலகத்தை முற்றிலுமாக துறந்து விடுவாரோ அவரே இந்த ஜமாஅத்தில் இணைந்தவராக இருக்கின்றார்.

அன்னார் கூறுகின்றார்கள்: உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவரே இறைவனது பார்வையில் உண்மையான நம்பிக்கையாளரும், பைஅத்தில் இணைந்தவரும் ஆவார். ஆனால் உலக நோக்கங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றார் என்றால் அவர் இந்த உடன்படிக்கையை முறிக்கின்றார். அப்படிப்பட்ட நபர் இறைவனது பார்வையில் குற்றவாளி ஆவார்.

அன்னார் கூறுகின்றார்கள்: நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். மனிதனின் செயல் நிலைகள் சிறந்ததாக இல்லாமல் நாவால் மட்டும் கூறுவது எவ்வித பயனும் அளிக்காது. அது வெறும் வெற்று வாதமாக மட்டுமே இருக்கும். உள்ளத்தில் நுழைந்துள்ள அந்த ஈமானே உண்மையான ஈமானாகும். மேலும் அது அவரது செயல்களின் மூலமாக அதை அழகுபடுத்திக் காட்டுகின்றது. அத்தகைய நிலையே சஹாபாக்களிடம் ஏற்பட்டது. அவர்களது உள்ளத்தின் ஆசைகள் முற்றிலுமாக நீங்கி விட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: பைஅத் செய்த பிறகு ஓர் அஹ்மதி எவ்வாறு இருக்க வேண்டும்? ஜமாஅத்துடன் எவ்வாறு வலுவான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக அன்னார் இவ்வாறு கூறினார்கள்:

எந்த கிளையின் தொடர்பு மரத்துடன் இருப்பதில்லையோ இறுதியில் அது காய்ந்து விழுந்து விடுகின்றது. எவர் உயிருள்ள ஈமானைப் பெற்றுள்ளாரோ அவர் உலகைப் பொருட்படுத்துவதில்லை. உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடியவர் அருளுக்குரியவர் ஆவார். ஆனால் மார்க்கத்தை விட உலகத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடியவர் மரணித்தவரைப் போன்றவர் ஆவார். அவர் ஒருபோதும் உண்மையான உதவியின் முகத்தைக் காணவே மாட்டார். மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கும் போதுதான் இந்த பைஅத் உங்களுக்கு பயனளிக்கும். மேலும் இதில் முன்னேற்றம் அடைய முயற்சி செய்யுங்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இங்கு புதிதாக வந்திருக்கக்கூடியவர்களிடம் நான் இது தொடர்பாக இதனை கூறிக் கொள்கின்றேன். அதாவது இங்கு அல்லாஹ் உங்களது நிலைமைகளை சிறந்ததாக ஆக்கியுள்ளான். மார்க்க சுதந்திரத்தை வழங்கியுள்ளான். இறைவணக்கத்தின் உரிமையை உங்களால் செலுத்த முடியும். சுதந்திரமாக உங்களது மார்க்த்தை நீங்கள் வெளிப்படுத்த முடியும். எனவே இங்கு வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் கடமையாகும். அதாவது உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க முழுமையான முறையில் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக தமது முழு ஆற்றலையும் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும். தொழுகையில் ஒரு விதமான மாற்றம் ஏற்பட வேண்டும். தொழுகையின் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும். பள்ளிவாசலை கட்டி விட்டோம். எனவே அதன் உரிமையை செலுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஜமாஅத்திடம் ஒரு மிக முக்கிய அறிவுரையை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: காலம் மிகவும் மோசமானதாக ஆகிக் கொண்டிருக்கின்றது. பலவகையான ஷிர்க் மற்றும் மார்க்கத்திற்கு புறம்பான விஷயங்கள் மற்றும் பல தீமைகள் உருவாகி விட்டன. நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என்று பைஅத்தின் போது செய்யப்படுகின்ற உடன்படிக்கையானது இறைவனுக்கு முன்னால் செய்யப்பட்ட உடன்படிக்கையாகும். எனவே மரணம் வரை இதை இதில் நிலைத்திருக்க வேண்டும். இல்லையென்றால் பைஅத் செய்யவில்லை என்று புரிந்து கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் நிலைத்து நின்றால் அல்லாஹ் மார்க்கம் மற்றும் உலகத்தில் உங்களுக்கு அருள் செய்வான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள். எனவே நாம் நமது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் உலகிற்கும், இந்த பேரழிவுகள் ஒரு சாதாரண பேரழிவு கிடையாது. இதனைப் பற்றி நூறு வருடங்களுக்கு முன்பே முன்னறிவிப்பு செய்யப்பட்டு விட்டது என்று நாம் எடுத்துக் கூற வேண்டும். இதிலிருந்து தப்பிப்பதற்குரிய ஒரே வழி மனிதன் இறைவன் பக்கம் வருவதே ஆகும். இப்போது கூட சிந்தித்து செயல்படவில்லை என்றால் பிறகு தப்பிக்க இயலாது. இவ்வாறே மனிதன் தனக்குத்தானே பல கஷ்டத்தை உருவாக்கி வைத்துள்ளான். போர்கள் இருக்கின்றன. அநீதி இழைக்கப்படுகின்றது. ஆனால் அல்லாஹ் கால அவகாசம் கொடுக்கின்றான். ஆனால் இறைவனது பார்வையில் இந்த அநீதி எல்லையை அடைந்து விட்டால் பிறகு இந்த அநீதியிழைக்கின்ற சமுதாயங்களுக்கு அழிவு தான் ஏற்படும். ஆனால் அழிவு ஏற்படும் போது, இது நெருப்பாகும். ஆனால் யார் அற்புதங்களைக் காட்டக்கூடிய அந்த இறைவனோடு அன்பு வைத்திருப்பார்களோ அவர்களே இந்த நெருப்பிலிருந்து காப்பாற்றப்படுவர் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கவிதையில் கூறியதற்கிணங்க அந்த நேரத்தில் அத்தகைய மக்களே காப்பாற்றப்படுவர்.

ஆக, இதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். தம்மையும், உலகையும் காப்பாற்றுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். மேலும் இறைவனை நாம் எவ்வாறு அடைய முடியும் என்பதற்காக நாம் நமது முழு ஆற்றலையும், சக்தியையும் பயன்படுத்த வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: அவனது இந்த அமைப்பானது, மனிதன் இறைவன் பக்கம் வர வேண்டும் என்பதற்காகவே ஆகும். அவ்வாறு வருவது கடினமானதாக இருந்தாலும், அது ஒருவகையான மரணமாக இருந்தாலும் இறுதியில் இதில் தான் வாழ்வு இருக்கின்றது. எவர் தன்னிடத்திலிருந்து ஷைத்தானின் பங்கை தூக்கி எறிந்து விடுகின்றாரோ அந்த நபர் அருளுக்குரியவர் ஆவார். அவரது வீடு, ஆன்மா, மற்றும் அவரது நகரம் ஆகிய அனைத்திலும் பரக்கத் ஏற்படுகின்றது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நாம் பைஅத்தின் உரிமையை செலுத்தியவாறு நம்மிடத்தில் தூய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. மேலும் உலகத்கை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்ற உடன்படிக்கையை நிறைவேற்றக் கூடியவர்களாகவும் இருப்போமாக. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாக்குறுதி அளித்துள்ள அல்லாஹ்வின் அருள்களுக்கு நாம் வாரிசாக ஆவோமாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் A. கலீல் அஹ்மது**